செ.வெ.எண் : 05/ஆகஸ்ட் நாள் : 03.08.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## 06.08.2017 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - தொகுதி II A (Group II A) தேர்விற்கான முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (03.08.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்டத்தில் வருகின்ற 06.08.2017 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - தொகுதி II A (Group II A) தேர்விற்கான முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் பல்வேறு அரசுத் துறைகளில் உள்ள உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர் உள்ளிட்ட பல்வேறு பணியிடங்களுக்கு தகுதியான நபர்கள் தேர்வு செய்வதற்காக தொகுதி II A (Group II A) தேர்வு நடத்தப்படுகிறது. இத்தேர்வானது இராமநாதபுரம் மாவட்டத்தில் வருகின்ற 06.08.2017 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறவுள்ளது. இத்தேர்வில் கலந்து கொள்வதற்காக விண்ணப்பித்த 14,660 தேர்வர்களுக்கு தேர்வுக்கான நுழைவுச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது. இத்தேர்வினை அமைதியான முறையில் நடத்திட ஏதுவாக மொத்தம் 45 இடங்களில் உள்ள 54 தேர்வு மையங்களில் தேவையான அளவு தேர்வு அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தேர்வின் போது முறைகேடுகள் ஏதும் நடக்காமல் தடுத்திடும் வகையில் பறக்கும் படை குழு மற்றும் நிறுத்தும் படை குழு உள்ளிட்ட கண்காணிப்பு குழுக்கள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் தேர்வு மையங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் ஒளிப்பதிவு செய்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுதவிர தேர்வு எழுதும் நபர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் அந்தந்த தேர்வு மையங்களில் ஏற்படுத்திட வேண்டும்.

தேர்வு நாளன்று தேர்வு எழுதும் நபர்கள் சிரமப்படாதவாறு கூடுதல் பேருந்துகளை இயக்கிட போக்குவரத்துத்துறை அலுவலர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் வினாத்தாள், விடைத்தாள் ஆகியவற்றை காவல்துறை பாதுகாப்புடன் அந்தந்த தேர்வு மையங்களுக்கு கொண்டு செல்லவும், தேர்வு முடிந்தவுடன் பாதுகாப்பான முறையில் மாவட்ட கருவூலத்திற்கு கொண்டு செல்வதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும் உறுதி செய்திட வேண்டும். இத்தேர்வு பணியில் ஈடுபடும் அலுவலர்கள் அனைவரும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வகுத்துள்ள அனைத்து விதிமுறைகளையும் எவ்வித பாரபட்சமுமின்றி பின்பற்றி அமைதியான முறையில் இத்தேர்வினை நடத்திட ஏதுவாக பணியாற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.ரா.பேபி, காவல்துறை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.இன்பமணி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.க.முனுசாமி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய பிரிவு அலுவலர் திரு.வி.சரவணன், உதவி பிரிவு அலுவலர்கள் திரு.டி.வசந்தகுமார், திரு.என்.பொன்செந்தில்குமார் உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**